1969 மார்ச் 24]

(உ) திருப்பணி விழாக்குழு அந்த துறையின் மூலம் சர்க்காருக்கு திருப்பித்தர வேண்டிய பாக்கி ஏதேனும் உண்டா ?

(எ) திருப்பணியின் வரவு-செலவுகளை ஆடிட் செய்யப்பட்ட ஆடிட் ரிப்போர்ட்டின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ரூ. 23,39,491·89.

(இ) இந்து சமய-அறக் கட்டளைகள் துறை மானியம் எதையும் வழங்கவில்லை.

(உ) இந்த வினா எழவில்லை.

(எ) இத்தணிக்கை அறிக்கைகள் 1371 முதல் 1375 வரையிலுள்ள பசலிகளைப் பற்றியன. இந்தத் தணிக்கை அறிக்கைகள் மூலம் ஏற்பட்ட பொதுவான விளைவுகள் போதிய அளவு மனநிறைவு அளிப்பவையாக கருதப்படுகின்றன. இந்தத் தணிக்கை அறிக்கைகள் பல பக்கங்களைக் கொண்டவை. எனவே, பேரவையில் அவற்றை வைக்க இயலவில்லை.

THIRU N. KASIRAMAN : Similarly when temple funds are diverted to non-governmental functions, will the Government be pleased to audit those accounts and to place the audit report before this House since temple funds are public properties and are under the control of the Government ?

மாண்புமிகு திரு. வே. வி. சுப்பையா : இந்த அறிக்கைகள் ஆடிட் செய்யப்படுகின்றன. ஆனால் ஆடிட் ரிப்போர்ட் பக்கங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் வைக்க இயலவில்லை.

திரு பெ. மலைச்சாமி : தலைவரவர்களே, இந்தத் திருப்பணியையொட்டி நடந்த ஒரு கோபுரத்திற்கான செலவை பிர்லா அவர்கள் ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அறநிலையங்கள்.

வினா :* 450 **புலவர். பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டத்தில் எத்தனை கோவில்கள் அறநிலைய பொறுப் பிலிருக்கின்றன ?

மாண்புமிகு திரு.கே. வி. சுப்பையா : திருச்சி மாவட்டத்தில் 1122 அறநிலையங்கள் இருக்கின்றன.

புலவர். பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, திருச்சி மாவட்டத்தில் இந்தக் கோயில்களைச் சேர்ந்த சொத்துக் களிலிருந்து எவ்வளவு வருமானம் அறநிலையக் குழுவிற்குக் கிடைக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அதுபற்றிய தகவல்கள் என் னிடத்தில் இல்லை.

குடியிருப்பு மனைகளுக்கு பட்டா வழங்கல்.

* 431—வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், சுக்காலியூர் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள புறம்போக்கு நிலத்தை குடியிருப்பு மனைக் காக பட்டா வழங்க வேண்டும் என்று கோரிக்கை ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?